ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================================

## அறிவுரை 38. அஞ்சுக நரகத் துயருக்கு.

நரகயாதனைகளுக்குப் பயப்படு.

“நமன்தமர் பாசம் விட்டால் அலைப்பூணுண்ணும்” அவல்லல்களையும் வெஞ்சொலாளரான நமன்தமர் செய்யும் வேதனைகளையும் தீரனான தர்மபுத்ரன் கேட்டு மோஹித்து விழும்படியான நரகமார்க்கத்தின் படிகளையும் அதி-துஸ்ஸஹ-அநந்த-நரக-யாதனைகளையும் தாபத்ரயாத்யாயாதிகளிலே பரக்கக்கேட்டு “अहं भीतोस्मि” (அஹம் பீ$_4$தோஸ்மி), “தெளிதொறும் நன்றும் அஞ்சுவன் நரகம் நான் அடைதல்” என்னும் தீவ்ர பீதியாலே

\- பரமபதஸோபானம்

நரகத்துக்குப் பயப்படுபவன் பாவங்கள் செய்யமாட்டான். நரகத் துன்பங்கள் கோரமானவை. திருவாய்மொழியிலிருந்தும் ஜிதந்தே ஸ்தோத்ரத்திலிருந்தும் மேற்கோள் காட்டி இதை விளக்குகிறார்.

யமதூதர்கள் பாசக்கயிற்றை நம்மீது போட்டால் உண்டாகும் துன்பங்களையும், கடுஞ்சொல் பேசும் அந்த யமதூதர்கள் செய்யும் சித்திரவதைகளையும், அஞ்சா நெஞ்சம் கொண்ட தர்மபுத்ரனையே பயமுறுத்துமளவுக்குக் கொடியதான நரக வழிகளையும், தாங்கொண்ணாத எண்ணற்ற நரகயாதனைகளையும் தாபத்ரயாத்யாயம் முதலியவற்றில் விரிவாகக்கேட்டு “நான் இந்தப் பயங்கரமான

ஸம்ஸாரத்தில் பயந்து கிடக்கிறேன்" "நரகமடைதலை நான் மிகவும் அஞ்சுகிறேன்" என்று சொன்னபடி தீவிரபயத்தாலே.

புராணங்களில் நரக வருணனைகளைக் கேட்டாலே பயமாயிருக்கிறது. இவ்வாறு பயப்படுவது நல்லது. நம்மை நல்வழிச் செலுத்த இந்தப்பயம் உதவும்.

****************